**செப்டம்பர் - 18**

**"என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார்."   - யாத் 33 : 14**

கர்த்தர் தமது ஜனங்களோடு எப்பொழுதும் இருக்கிறார். அவர் நம்மைப் பற்றி எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறார். நமது நலன்களுக்காக ஜாக்கிரதையாய் பார்த்துக் கொண்டும் அபாயத்தில் நம்மைக் காப்பாற்றிக்கொண்டும், உலக சம்பந்தமான பொருள்களையும் ஆவிக்குரிய காரியங்களையும் கொடுத்துக்கொண்டும், நமது இருதயங்களை வாசித்துக் கொண்டும், அவருக்கு நம்மிடமுள்ள அன்புள்ள பக்தியின் ஒவ்வொரு உணர்ச்சி வேகத்தையும் கவனித்துக் கொண்டும், நம்முடைய ஒழுங்கிற்காகவும், சுத்திகரிப்புக்காகவும், நம்மை சுற்றியுள்ள செல்வாக்குகளை உருவாக்கிக் கொண்டும் உதவிக்காகவோ, அநுதாபத்திற்காகவோ அல்லது அவரோடு ஐக்கியத்திற்காகவோ வெளியிடும் நமது தெளிவற்ற கூப்பிடுதலையும் கேட்டுக் கொண்டும் இருக்கிறார். அலுவலுள்ள மத்தியான வேளையிலோ அல்லது இரவின் அமைதியான பாகங்களிலோ அவரை நாம் கூப்பிட்டாலும், அவர் ஒரு பொழுதும் ஒரு ஷணப் பொழுதாகிலும் காவல் காத்தலிலிருந்து விலகுகிறதில்லை. இப்படிப்பட்ட நிரந்தரமான விசுவாசத்தை அடைவது எவ்வளவு பாக்கியமானதாக இருக்கிறது! நமது புத்திர சுவிகாரத்தின் இந்த சான்றை பெற்றிராமல் ஒரு தேவனுடைய பிள்ளையும் இருக்கிறதில்லை.
**- Z ’03, 376 (R 3250)**

சமூகம் என்று இங்கே மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை முகத்தை குறிக்கிறது. கர்த்தரின் முகம் அவருடைய தலைக்கு அடையாளமாக இருக்கிறது. மனுக்குலத்திலுள்ள அவருடைய வெறுப்பு அவர்களுக்கு தனது முதுகைத் திருப்பிக் கொண்டதினாலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருடைய தயை திரும்பும் பொழுது அவருடைய முகம் அவர்கள் மேல் அன்பையும், ஆரோக்கியத்தையும், ஆசீர்வாதத்தையும் பிரகாசிக்கும். இப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்கு அவர்களுடைய விசேஷித்த பங்காகத் தமது தயையை அளிக்கிறார். வேறு எதிலாவது நாம் குறையுள்ளவர்களாய் இருந்தால், இதன் உடமை நம்மை பிரதானமாய் ஐசுவரியமுள்ளவர்களாக்குகிறது. நாம் நமது ஆவிக்குரிய சத்துருக்களை ஜெயிப்போம் என்றும் ஜெயங்கொண்ட பிறகு பாவத்திலிருந்தும், வஞ்சகத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும், உலகத்தனத்திலிருந்தும் விடுபட்டு, ஞானத்திலும், நீதியிலும், அன்பிலும், வல்லமையிலும், ராஜ்யத்துக்கடுத்த மனதிலும், நித்திய சமாதானத்தின் கானானின் இளைப்பாறுதலால் நாம் ஆசீர்வதிக்கப்படுவோம் என்று அவருடைய தயை உத்தரவாதமளிக்கிறது. இதுவே தேவனுடைய சிறந்த லட்சியமான உண்மையான இளைப்பாறுதல். **- P ’30, 151, 152.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 5:12; 11:7; 41:11,12; 102:13; நீதி 16:7; எசே 39:29; லூக் 2:52; யோவா 14:16-23; அப் 10:35; எபே 1:6; எபி 4:14-16; 1பேது 2:9.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 25 (R 5387).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் தேவனுடைய தயவிலும் இளைப்பாறுதலிலும் நான் என்ன அனுபவங்களை அடைந்தேன்? அதை அடைவதற்கு நான் என்ன செய்ய வேண்டியிருந்தது? அதை நான் எவ்வாறு பயன்படுத்தினேன்?**